# இலங்கையின் இளைஞர்களுக்கு அதிகளவு தொழில் வாய்ப்புகளையும் வருமானத்தையும் பெற உதவும் Online freelancing

குறைந்த செலவிலான ஊழியத்திற்காக, புவியியல் எல்லைக் கோடுகளைக் கடந்து Online freelancing மூலமான சிறிய மற்றும் எளிமையான வேலைகள், இணையத் தளப்பரப்புகளினூடாக வேலையாட்களுக்கு அளிக்கப்படுகின்றன. இணையத் தளப் பரப்புகளின் ஊடாக வழங்கப்படும் வழமையான "jobs" ஆனவை graphic design, data entry, proofreading, translation, copyediting, market research, programming, data verification போன்றவற்றை உள்ளடக்குகின்றன. Online freelancing ஆனது துரிதமாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. அத்துடன் அது இலங்கையின் இளைய பராயத்தினரிடையே பிரபல்யத்தையும் அடைந்து வருகின்றது. ஏனெனில் அது மேலதிக வருமானத்தை பெறுவதற்கு வழி வகைகளை உருவாக்கித் தர வல்லதாக உள்ளது. இது போன்ற வேலைகளை வீட்டிலிருந்தே ஒருவருடைய திறன்கள் மற்றும் அறிவைக் கொண்டே செய்து முடிக்கக் கூடியதாக உள்ளது.

online freelancing இணையத்தளப் பரப்புகளில் பணியாற்றுவதில் உள்ள சவால்கள் மற்றும் இயலுமைக் காரணிகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காக LIRNEasia ஆனது ஒரு ஆய்வினை முன்னெடுத்தது. 16 இல் இருந்து 40 வயதுக் குழுவில் இருக்கும் 26% இலங்கையர்கள் online freelancing பற்றி அறிந்துள்ளனர் என அவ் ஆய்வின் மூலம் தெரிய வருகின்றது. அவர்களில் 9% ஆனோர் online freelancing வேலைகளில் பணியாற்ற ஆர்வத்தை வெளிப்படுத்தி உள்ளனர். இலங்கையில் அண்ணளவாக 17000 -22,000 freelancers இருக்கக் கூடும் என LIRNEasia மதிப்பிடுகின்றது. online freelancing இனை முன்னெடுப்பதானது, நகர் வாழ் உயர் மற்றும் நடுத்தர வகுப்பு மக்களின் வாழ்க்கையில் ஒரு கணிசமான சாதகமான சமூகப் பொருளாதார தாக்கத்தை மட்டும் ஏற்படுத்துவதில்லை. அதற்கும் மேலாக வறிய மற்றும் கிராமப் புறப் பிராந்தியங்களிலும் அது தன் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

கற்கையின் முக்கிய முடிவுகள் கீழே சுருக்கமாக வழங்கப்பட்டு உள்ளன.

## பிரதான அவதானிப்புகள்

### இலங்கையில் உள்ள FREELANCERகளின் எண்ணிக்கை

- இலங்கையில் அண்ணளவாக 17,000 - 22,000 freelancerகள் பல்வேறு இணையத் தளப் பரப்புகளில் தம்மை பதிவு செய்து கொண்டு, உலகம் முழுவதும் தங்கள் திறன் வெளிப்பாடுகளை விற்பனை செய்கின்றார்கள் என LIRNEasia மதிப்பிடுகின்றது. Fiverr, Freelancer மற்றும் Upwork ஆகியன இலங்கை இளைஞர்களால் இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் பிரபல்யமான இணையத்தளப் பரப்புகளாகும். Fiverr எனும் இணையத்தளம் ஆனது அதிக அளவிலான பதிவு செய்யப் பட்ட பணியாட்களை தன்னகத்தே கொண்டதாகும்.

### ONLINE FREELANCING மற்றும் அதற்கான ஆர்வம் தொடர்பிலான விழிப்புணர்வு

- 16 இல் இருந்து 40 வயதிற்கு உள்ளான 26% இலங்கையின் சனத் தொகையானது online freelancing பற்றி அறிந்துள்ளது. அத்துடன் பெண்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஆண்களே கணிசமான அளவு அதிகமாக online freelancing பற்றி விழிப்புணர்வுடன் உள்ளனர். குருநாகல், அனுராதபுரம் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் online freelancing பற்றி அதிக விழிப்புணர்வுடன் உள்ளதாக ஆய்வு தெரிவிக்கின்ற அதே வேளை, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் online freelancing தொடர்பான விழிப்புணர்வு மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.

- மேற் கூறியவைகளில், online freelancing வேலைகளில் இணைந்து பணியாற்றுவதற்கு தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி இருந்தது வெறும் 9% ஆகும். அது போன்ற பணிகளை ஆற்றுவதற்கு ஆண்கள் மத்தியிலேயே அதிகளவு (11%) ஆர்வம் வெளிப்படுத்தப் பட்டது. ஒப்பீட்டளவில் பெண்களில் அரைவாசிக்கும் சற்று அதிகமான அளவினரே (7%) இதில் தம் ஆர்வத்தை வெளிப்படுத்தி இருந்தனர்.

### ONLINE FREELANCING இன் நன்மைகள்

- பகுதி நேர freelancing வேலைகளில் ஈடுபட்டு உள்ளவர்கள், ஒரு மாதத்திற்கு அண்ணளவாக ரூ. 20, 000 இல் இருந்து ரூ. 30, 000 வரை சம்பாதிக்கின்றார்கள். இந்தப் பண அளவு ஆனது அவர்கள் பெறும் சம்பளத்திற்கு மேலதிகமாகக் கிடைக்கப் பெறும் ஒரு தொகை ஆகும். ஏனெனில் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஒரு முழு நேர வேலையில் ஈடுபட்டுக் கொண்டே, இந்தப் பணத்தை பகுதி நேர வேலை வழியாக சம்பாதிக்கின்றார்கள். இந்த மேலதிக சம்பாதிப்பு ஆனது பல freelancersகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவியுள்ளது.
- இளைஞர்கள் மத்தியில் Online freelancing விரும்பத்தக்கதாக ஆகி உள்ளமைக்கு முக்கிய காரணம் அதன் நெகிழ்வுத் தன்மை (flexibility) மிக்க பணியாற்றுகை இயல்பு ஆகும். ஒருவர் தன்னையே தனது மேலதிகாரி ஆக தெரிவு செய்து கொள்கின்றார். வருமான உற்பத்தி நடவடிக்கையில் அவர்களின் திறன்களை அதிக பட்சமாக உயர்த்துவதற்கும் அவர்களுக்கு இயலுமாக உள்ளது.
- இந்தத் துறையில் வெற்றிகரமாக சிறந்து விளங்குவதற்கு ஆங்கில மொழித் திறன்கள் ஒரு முன் - தேவைப்பாடு அல்ல என இலங்கையின் Freelancerகள் தெரிவிக்கின்றனர். வாடிக்கையாளருக்கு தகவலை அனுப்பி தொடர்பாடல் செய்வதற்கு அடிப்படை ஆங்கில அறிவு மட்டுமே போதுமானது.

## FREELANCING தொழில்வழியினைத் தெரிவு செய்கையில் சில விடயங்கள்

- LIRNEasia அமைப்பின் இந்தக் கற்கையில் நேர்காணல் செய்யப்பட்ட சில பணியாளர்கள், குறித்த FREELANCING வேலையை முடித்துக் கொடுத்த போதிலும், அவ் வேலைக்கான கொடுப்பனவினை பெற முடியாமல் உள்ளனர். எவ்வாறு freelance கொடுப்பனவு முறைமையானது இயங்குகின்றது என்பது பற்றிய போதிய விழிப்புணர்வு இன்மையே இதற்குக் காரணம். அவர்களின் கொடுப்பனவைப் பெற முடியாத சிக்கலில், இலங்கையில் PayPal inward remittances அனுமதிக்கப்படாமை ஒரு தடையாக உள்ளது.
- இதற்கு மேலதிகமாக, தொழில் பாதுகாப்பின் குறைவு, தொழில் அங்கீகாரம் குறைவு, வேலை - வாழ்க்கை சமநிலையை பேணுவதில் இயலுமை இன்மை ஆகியன freelancerகள் இந்தத் துறையில் பணி ஆற்றுகையில் எதிர்கொள்ளும் பாதகமான அம்சங்கள் ஆகும்.

## எவ்வாறு ஒரு ONLINE FREELANCER ஆக மாறுவது?

- வெற்றிகரமான freelancerகளைப் பொறுத்தவரை, ஒரு freelancer தொழில்வழியினை, திறன்கள் மற்றும் தீர்மானங்களின் சரியான கலவையால், கட்டி எழுப்புவது எளிதானது. fiverr.com, freelancer.com அல்லது upwork.com போன்ற இணையத் தளப் பரப்புகளில், சிறிய இலக்குகளை (இலச்சினை வடிவமைப்பு, இணையத்தள அபிவிருத்தி மற்றும் மொழிபெயர்ப்பு) வழங்குமாறு கோரி எவரும் தம்மைப் பதிவு செய்து கொள்ள முடியும். அவர்கள் குறித்த ஒரு செயற்றிட்டத்திற்கான bid இனைச் செய்ய வேண்டும். மற்றும் குறித்த ஒரு இலக்கை செய்து முடிப்பதற்குப் பொறுப்பெடுத்துக் கொள்வதற்கான தம் செயற்றிறனை முன்னிறுத்தவும் வேண்டும். முதலாவது வேலையை பெறுவது கடினமாகத்தான் இருக்கும். அத்துடன் அதற்கு சில காலம் ஆகவும் கூடும். ஆனால் வேலை பெறுதல் சாத்தியம் அற்றது என தீர்மானிக்கக் கூடாது. அவர்கள் சில வேலைகளைப் பெற்று, அவர்களுடைய பக்கதோற்ற வடிவத்தினைக் (profile) கட்டியெழுப்பிய பின், சம்பாதிப்புகள் எளிதாக பெருகி வரத் தொடங்கும்.

## ஆய்வு

### தேசிய மட்டத்திலான கருத்துக் கணிப்பு

LIRNEasia ஆனது 16 இல் இருந்து 40 வயது எல்லைக்கு உட்பட்ட இலங்கை மக்களிடம் இந்த அடிப்படைக் கருத்துக் கணிப்பை நடத்தியது. இக் கருத்துக் கணிப்பின் நோக்கம் online freelancing இன் நிகழ்வினை அறிந்து கொள்ளல் மற்றும் அது போன்ற வேலைகளில் ஈடுபடல் தொடர்பான அவர்களின் ஆர்வத்தைப் பற்றி தெரிந்து கொள்ளல் ஆகியன ஆகும். நாட்டின் 25 மாவட்டங்களிலும் 5377 பதிலளிப்பாளர்களை இந்தக் கருத்துக் கணிப்பு ஆனது பயன்படுத்திக் கொண்டது. மேலும் இதற்கான களப்பணி ஆனது நவம்பர் 2015 இல் இருந்து ஜனவரி 2016 வரை ஆற்றப் பட்டது.

### ONLINE FREELANCERகள் உடனான கூர்கவனக் குழு கலந்துரையாடல்கள்

online Freelancing தொடர்பிலான மக்களின் கருத்துகள் மற்றும் அணுகற் பாங்குகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காக, தர அளவை ஆய்வுத் திட்டம் (qualitative research) ஒன்று வடிவமைக்கப் பட்டது. ஆறு கூர்கவனக் குழு கலந்துரையாடல்களும் ஒரு அதி ஆழமான நேர்காணலும் கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை ஆகிய மூன்று சனத் தொகைப் பெருக்கம் உள்ள மையங்களில் மேற் கொள்ளப் பட்டன. இவ் இரு வழி முறைகளின் ஊடாகவும் ஒட்டுமொத்தமாக 28 பதிலளிப்பாளர்கள் நேர்காணல் செய்யப் பட்டனர்.

## எழுத்தாளர்

சுதாகரன் பேரம்பலம் : சிரேஷ்ட ஆய்வாளர்:
LIRNEasia : Suthaharan@lirneasia.net

**Computer copies / Softcopies of this document can be requested from LIRNEasia. Email: Suthaharan@lirneasia.net**